## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## இரண்டாம் பத்து

### ஐந்தாம் திருமொழி - பாராயது
### திருக்கடல்மல்லை 1

** பாராயது உண்டு உமிழ்ந்த பவளத் தூணைப் *
படுகடலில் அமுதத்தைப் பரி வாய் கீண்ட
சீரானை * எம்மானைத் தொண்டர் தங்கள்
சிந்தை உள்ளே * முளைத்து எழுந்த தீங்கரும்பினை **
போரானைக் கொம்பொசித்த போர் ஏற்றினைப் *
புணர் மருதம் இற நடந்த பொற்குன்றினை *
காரானை இடர் கடிந்த கற்பகத்தைக் *
கண்டது நான் கடல்மல்லைத் தலசயனத்தே 1

பூண்டு அவத்தம் பிறர்க்கு அடைந்து தொண்டுபட்டுப் *
பொய்ந்நூலை மெய்ந்நூல் என்று என்றும் ஓதி
மாண்டு * அவத்தம் போகாதே வம்மின் * எந்தை
என் வணங்கப்படுவானை ** கணங்கள் ஏத்தும்
நீண்ட அத்தைக் கருமுகிலை எம்மான் தன்னை *
நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார் சோலை *
காண்டவத்தைக் கனல் எரி வாய்ப் பெய்வித்தானைக் *
கண்டது நான் கடல்மல்லைத் தலசயனத்தே 2

உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்தி வேறாய் *
உலகுய்ய நின்றானை * அன்று பேய்ச்சி
விடம் பருகு வித்தகனைக் * கன்று மேய்த்து
விளையாட வல்லானை வரை மீகானில் **
தடம் பருகு கருமுகிலைத் தஞ்சைக் கோயில் *
தவ நெறிக்கு ஓர் பெரு நெறியை வையம் காக்கும் *
கடும் பரி மேல் கற்கியை நான் கண்டு கொண்டேன் *
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 3

பேய்த் தாயை முலை உண்ட பிள்ளை தன்னைப் *
பிணை மருப்பின் கருங்களிற்றைப் பிணை மானோக்கின் *
ஆய்த் தாயர் தயிர் வெண்ணெய் அமர்ந்த கோவை *
அந்தணர் தம் அமுதத்தைக் குரவை முன்னே
கோத்தானை ** குடமாடு கூத்தன் தன்னைக் *
கோகுலங்கள் தளராமல் குன்றம் ஏந்திக்
காத்தானை * எம்மானைக் கண்டு கொண்டேன் *
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 4

பாய்ந்தானைத் திரி சகடம் பாறி வீழப் *
பாலகனாய் ஆலிலையில் பள்ளி இன்பம்
ஏய்ந்தானை * இலங்கொளி சேர் மணிக் குன்றன்ன *
ஈரிரண்டு மால்வரைத் தோள் எம்மான் தன்னை **
தோய்ந்தானை நிலமகள் தோள் தூதிற் சென்று * அப்
பொய்யறை வாய்ப் புகப் பெய்த மல்லர் மங்கக்
காய்ந்தானை * எம்மானைக் கண்டு கொண்டேன் *
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 5

கிடந்தானைத் தடங்கடலுள் பணங்கள் மேவிக் *
கிளர் பொறிய மறி திரிய அதனின் பின்னே
படர்ந்தானைப் * படு மதத்த களிற்றின் கொம்பு
பறித்தானைப் * பார் இடத்தை எயிறு கீற
இடந்தானை ** வளை மருப்பின் ஏனம் ஆகி *
இருநிலனும் பெரு விசும்பும் எய்தா வண்ணம்
கடந்தானை * எம்மானைக் கண்டு கொண்டேன் *
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 6

பேணாத வலி அரக்கர் மெலிய அன்று *
பெருவரைத் தோள் இற நெரித்து அன்றவுணர் கோனை *
பூண் ஆகம் பிளவெடுத்த போர் வல்லோனைப் *
பொரு கடலுள் துயில் அமர்ந்த புள் ஊர்தியை **
ஊணாகப் பேய் முலை நஞ்சு உண்டான் தன்னை *
உள்ளுவார் உள்ளத்தே உறைகின்றானை *
காணாது திரிதருவேன் கண்டு கொண்டேன் *
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 7

பெண்ணாகி இன்னமுதம் வஞ்சித்தானைப் *
பிறை எயிற்று அன்று அடல் அரியாய்ப் பெருகினானை *
தண்ணார்ந்த வார்புனல் சூழ் மெய்யம் என்னும் *
தடவரை மேல் கிடந்தானைப் பணங்கள் மேவி **
எண்ணானை எண்ணிறந்த புகழினானை *
இலங்கொளி சேர் அரவிந்தம் போன்று நீண்ட
கண்ணானை * கண்ணாரக் கண்டு கொண்டேன் *
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 8

தொண்டாயார் தாம் பரவும் அடியினானைப் *
படி கடந்த தாளாளற்கு ஆளாய் உய்தல்
விண்டானை * தென்னிலங்கை அரக்கர் வேந்தை *
விலங்கு உண்ண வலங்கை வாய்ச் சரங்கள் ஆண்டு **
பண்டாய வேதங்கள் நான்கும் * ஐந்து
வேள்விகளும் கேள்வியோடு அங்கம் ஆறும்
கண்டானை * தொண்டனேன் கண்டு கொண்டேன் *
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 9

** பட நாகத்தணைக் கிடந்து அன்று அவுணர் கோனைப் *
பட வெகுண்டு மருதிடை போய்ப் பழன வேலி *
தடம் ஆர்ந்த கடல்மல்லைத் தலசயனத்துத் *
தாமரைக் கண் துயில் அமர்ந்த தலைவர் தம்மை **
கடம் ஆரும் கருங்களிறு வல்லான் * வெல் போர்க்
கலிகன்றி ஒலி செய்த இன்பப் பாடல் *
திடமாக இவை ஐந்தும் ஐந்தும் வல்லார் *
தீவினையை முதல் அரிய வல்லார் தாமே 10

**அடிவரவு:** பாராயது பூண்டு உடம்பு பேய் பாய்ந்தானை கிடந்தானை பேணாத பெண் தொண்டாயார் படம் நண்ணாத

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**